ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2321/64 - 2023 මාර්තු මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.03.02
*2321/64 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978(X)(ஈ)*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட கொழும்பு 07, மலலசேகர மாவத்தை, 30அ என்னும் இலக்கத்தில் அமைந்துள்ளதுமான இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐசிஏஎஸ்எல்) தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2022, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதிய 2302/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் “பிரயோகக் கணக்கியல் இளமானி” என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐசிஏஎஸ்எல்), பொது நிதி முகாமைத்துவம் முதுமானி, (SLQF மட்டம் 9) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் -

(அ) கணக்கியல் அல்லது நிதிப் பாடப் பிரிவில் 30 திறமை மதிப்பீடுகள் உள்ளடங்கலாக, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது இலங்கை கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இளமானிப் பட்டம் ;

1A - PG 6243 — 286 (2023/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) இலங்கை கணக்காளர் சேவை, அரச கணக்காய்வுச் சேவை அல்லது உள்நாட்டு இறைவரி தொடர்புபட்ட ஏதேனும் சேவையில் ஏதேனும் மட்டத்தின் அலுவலரொருவராகவிருந்து, அங்கீகரிக்கப்பட்டதொரு இளமானி பட்டம், அல்லது சமமான உயர்தொழில்சார் தகைமைகள் அல்லது உயர் தகைமைகள் ;

(இ) நிதி மேலாளர், கணக்காளர் அல்லது ஏதேனும் அரச கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட அமைப்பு அல்லது வேறு ஏதேனும் வேறு ஒத்த அரச நிறுவனமொன்றில் அதனையொத்த பதவியை வகித்திருக்கின்ற அலுவலரொருவராகவிருந்து, அங்கீகரிக்கப்பட்டதொரு இளமானி பட்டம், அல்லது இயைபான துறையில் அதனையொத்த உயர்தொழில்சார் தகைமைகள் அல்லது உயர் தகைமைகள் ;

(ஈ) வேறு ஏதேனும் அரச ஊழியராகவிருந்து, அங்கீகரிக்கப்பட்டதொரு இளமானி பட்டம், அல்லது இயைபான துறையில் மூன்று (3) ஆண்டுகள் அனுபவத்துடன் கணக்கியல் அல்லது நிதி அல்லது தொடர்புபட்ட பாடத்தில் சமனான உயர்தொழில்சார் தகைமைகள் ;

(உ) நிகழ்ச்சித் திட்டத்தைப் பின்பற்றுவதற்கான ஆர்வமுள்ள ஆளொருவராகவிருந்து, மூன்று (3) ஆண்டுகள் பின்னரான தகைமை வேலை அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்டதொரு இளமானி பட்டம், அல்லது சமனான உயர்தொழில்சார் தகைமைகள் ;

(ஊ) இலங்கை பட்டயக் கணக்காய்வாளர்கள் நிறுவனத்தின் (ICASL) கல்விசார் அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டவாறு, இலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) (1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இயைபான பாடப்பிரிவில் தேசிய தொழிற்கல்வித் தகைமைகள் (NVQ) (SLQF மட்டம் 7) பூர்த்தி.

2. இக்கட்டளையின் நோக்கத்துக்காக, பின்வரும் தகைமைகள் இயைபான உயர் தொழில்சார் தகைமைகளாக அங்கீகரிக்கப் படும் -

1. நான்கு (4) வருட கணக்கியலில் உயர் தொழில்நுட்பவியலில் திப்ளோமா (HNDA) கற்கைநெறி ;

2. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் முகாமைத்துவம் அல்லது வர்த்தகத்தில் உயர் தொழில்நுட்பவியலில் திப்ளோமா ; அல்லது

3. பட்டயம் பெற்ற நிதி ஆய்வாளர் (CFA), பட்டயக் கணக்காளர் (CA), பட்டய நிறுவக மேலாண்மைக் கணக்காளர்கள் (CIMA), பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்களின் சங்கம் (ACCA) அல்லது பட்டயதாரர்கள்.

3. இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (ஐசிஏஎஸ்எல்) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கின்றது.

**அட்டவணை II**

| **நிரல் I**<br>*நிகழ்ச்சித்திட்டங்கள்* | **நிரல் II**<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| பொது நிதி மேலாண்மையில் முதுமானி | எம்பிஎஃப்எம் |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, பெப்புருவரி 27.

EOG 03-0013

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.